ஆகஇரண்டுவழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது வழக்குகள் சம்பந்தமாக ஆராய்வது வழக்குகளுக்குக் குந்தகம் ஏற்படுமென்பதால் அதைப்பற்றி விவாதிப்பது பொருத்தமாக இராது. போலீசார் சமாளிக்க வேண்டிய அளவிற்கு சமாளித்து இந்த நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். அதே கோர்ட்டுக்கு முன்னால் ஏற்கெனவே பல கொலைகள் பட்டப்பகலில் நிகழ்ந்திருக்கின்றன. பட்டப்பகலிலேயே இரண்டு, மூன்று கொலைகள் விழுந்திருக்கின்றன. இவைகள் ஏற்கெனவே நடைபெற்றிருக்கின்றன. எனவே இந்த ஆட்சியிலேதான் நடந்திருக்கிறது என்று கருதத் தேவையில்லை. போலீசார் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மேலும் இது சம்பந்தமாக நல்ல நிலைமை உருவாக வேண்டுமென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகளின் விவரம், குறிப்புகள் வரவில்லை. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பதால், அதைப் பற்றி விவாதிப்பதற்காக சபையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை, சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : As I understand that there is a possibility of action regarding the happenings which took place on the 4th March, I refrain from giving my consent to this adjournment motion. Also, I do not give my consent to the other motion given notice of by Thiru Chemaichamy.

இத்துடன் ஒற்றிவைப்பு தீர்மானங்கள் முடிவடைந்தன.

அடுத்து திரு. விநாயகம் அவர்கள் மீதுள்ள உரிமைப் பிரச்சினைப் பற்றி குழுவுக்கு விவரங்கள் அனுப்பியிருக்கிறதா என்று கேட்டார்கள். அது பற்றி நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துச் சொல்லுகிறேன். திருத்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை இன்னும் பார்க்க முடியவில்லை. எனவே இப்பொழுது பதில் சொல்ல முடியாமல் இருக்கிறேன். நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்த பிறகுதான் என்னால் முடிவு சொல்ல முடியும். நானே இன்னும் அதைப் பார்க்கவில்லை.

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) நூல்கத்தில் பேரவை நடவடிக்கைக் குறிப்புச் சுவடு வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் திருத்தப்படாத நடவடிக்கைக் குறிப்புகளைப் பேரவை நூலகத்தில் வைப்பது குறித்து ஒரு பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்பினார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நூலகத்தில் நடவடிக்கைக் குறிப்புகளை வைப்பதோ அல்லது வைக்காமல் இருப்பதோ பேரவைத் தலைவரின் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டது. இதைப் பற்றிப் பேரவையில் கேள்வி கேட்கக்கூடாது. அதைப் பற்றி May's Parliamentary Practice 350-வது பக்கத்திலுள்ளதை நான் பல தடவைகள் படித்திருக்கிறேன். **Questions dealing with matters within the jurisdiction of the Speaker should be addressed to the Speaker by private notice.** நீங்கள் இதைப் பற்றிக் கடிதம் எழுதி அல்லது நேரிலே கேட்டு தகவல் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விதி 350-வது பக்கத்தில் இருக்கிறது. அதற்குக் காரணமும் இருக்கிறது. என்னைப் பற்றி அல்லது பேரவைத் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்ட காரியங்களைப் பற்றி. நீங்கள் பேரவையில் எழுப்புவதாயிருந்தால், அதைக் குறித்து என்னுடைய கருத்துக்களைப் பேரவையிலே கூறுவதற்கு பேச்சுரிமை கிடையாது. அவ்வாறு நீங்கள் சொல்வதற்குப் பதில் சொல்ல முடியாமல் இருப்பதால் தான் இந்த விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் தாங்கள் எழுப்பிய பிரச்சினையைப் பற்றி அடுத்த வாரம் நடைபெறவிருக்கிற " நடைமுறை விதிக் குழு " " ரூல்ஸ் கமிட்டி "யில் வைக்கச் சொல்லியிருக்கிறேன். அதில் தங்கள் கருத்துக்களைக் கூறி அதற்கு எடுக்க வேண்டிய முடிவுகளை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

1968 மார்ச் 6]

திரு. க. இராமமூர்த்தி : தலைவரவர்களே, எங்களுடைய கட்சிக் கொறடா மாண்புமிகு விநாயகம் அவர்கள் மீதான பிரச்சினையின்மீது எத்தனை நாட்களுக்குள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்கள் என்று தெரிந்து கொள்ளமுடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை நாட்களுக்குள் என்று சொல்ல முடியாது. கூடிய விரைவில் குறிப்பிடுகிறேன். திருத்தப்பட்ட பிரதிகளைப் படித்துப் பார்த்தபிறகுதான் இதைப் பற்றிக் கூற முடியும். அதற்கு வாக்குறுதி சொல்ல விருப்பமில்லை.

4. கவன ஈர்ப்பு.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விளைச்சலின்மையும், வரி தள்ளுபடியும், கடன் வசூல் ஒத்தி வைப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் திரு. இராசாங்கம் அவர்கள் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு முக்கியமான காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

திரு. மா. இராசாங்கம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, 41-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றைக் கொண்டு வருகிறேன்.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு–வைகை அணைகள் மூலம் பாசன வசதி பெறும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தண்ணீர் இல்லாது விளைச்சலின்றிச் சாவியாகிவிட்டபடியால் இந்நிலங்கள் மீதான வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலை ஒத்திப்போடுவதும் பற்றிய காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் எனது பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிற அவசரமும் பொது முக்கியமுமான காரியம் ஒன்றினை மாண்புமிகு உணவு, வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு–வைகை அணைகள் மூலம் பாசன வசதிபெறும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தண்ணீர் இல்லாது விளைச்சலின்றிச் சாவியாகிவிட்டன. ஆகவே, இந்நிலங்கள் மீதான வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலை ஒத்திப் போடுவதும் பற்றிய அவசரமும் பொது முக்கியமும் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு உணவு, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெரியாறு–வைகை அணைகள் மூலம் பாசன வசதிபெறும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தண்ணீர் இல்லாது விளைச்சலின்றிச் சாவியாகிவிட்டன என்றும், இந்நிலங்கள் மீதான வரிகளைத் தள்ளுபடி செய்யவும், கடன் வசூலை ஒத்திப் போடவும் வேண்டும் என்று நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங்களில் பெரியாறு பாய்ச்சலின்றிப் பாதிக்கப்பட்ட பகுதியில் பயிர்கள் வாடிப் போவதற்கோ அல்லது சாவி அறுவடைக்கோ இடமில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. திருமங்கலம், உசிலம்பட்டி வட்டங்களில் திருமங்கலம் முக்கியக் கால்வாயின் (வைகை நீர்) கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு ஆண்டுதோறும் ஜூன் திங்களிலிருந்து 3 திங்களுக்கு குறுவைப் பயிர் ஒன்றைப் பயிரிட வைகை